2022 மார்ச் 22]

தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு முதல்வர் அவர்களிடமும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் - மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையின்மூலம் கட்டடங்கள் கட்டும் பணியினை நாங்கள் எடுத்துச் செய்வதில்லை. குழந்தைகளைப் பராமரிப்பதுதான் இத்துறையின் பணி. இருந்தபோதும், ஆண்டுக்கு மூன்று அங்கன்வாடிக் கட்டடங்களை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினர்களும் கட்டித்தருகிறார்கள். அதுமட்டுமல்லாமல், நகராட்சி மற்றும் மாநகராட்சி நிதி மற்றும் ஊரக வளர்ச்சித் துறை நிதியின்மூலமும் அந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. ஆகவே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கூறி, பிற துறைகள்மூலம் அந்தக் கட்டடங்கள் கட்ட ஆவன செய்யப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 35, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. பிரபாகரன், மாண்புமிகு மீன்வளம் - மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

35—

கால்நடை மருத்துவமனை

***15246—திரு. ம. பிரபாகரன்:**

மாண்புமிகு மீன்வளம் - மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் தொகுதி, தேனூர் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம் - மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

[2022 மார்ச் 22

(அ) மற்றும் (ஆ) தற்போது நடைமுறையில் உள்ள அரசு விதிகளின்படி, தேனூர் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை துவக்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. பிரபாகரன் அவர்கள்.*

திரு. ம. பிரபாகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தில் முதன்முதலாகப் பேசுவதற்கு வாய்ப்பளித்த தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, 8 கோடி தமிழர்களின் இதயங்களில், "நம்மைப் பாதுகாக்க ஒரு தலைவர் ஆட்சி செய்கிறார்" என்ற உணர்வை ஏற்படுத்தியிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், நமது இளைஞரணிச் செயலாளர் மரியாதைக்குரிய அண்ணன் உதயநிதி அவர்களுக்கும், எங்களது கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் அண்ணன் ராசா அவர்களுக்கும், மாவட்ட அமைச்சர் அண்ணன் சிவசங்கர் அவர்களுக்கும், தொகுதியினுடைய மக்களுக்கும், மாவட்ட மக்களுக்கும், கழக நிருவாகிகளுக்கும், கூட்டணிக் கட்சி தோழர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

எங்களது பெரம்பலூர் மாவட்டம், பின்தங்கிய, தொழில் வளர்ச்சி ஏதும் இல்லாத வறட்சியான மாவட்டம் ஆகும். விவசாயத்தைவிட கால்நடை வளர்ப்பினை மட்டுமே மக்கள் வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர். பெரம்பலூரில் சுமார் 1,20,000 மாடுகள்மூலம், நாள் ஒன்றுக்கு 2,70,000 லிட்டர் பால் ஆவின் மூலமாகக் கொள்முதல் செய்யப்படுகிறது.

ஆலத்தூர் வட்டம், தேனூர் கிராமம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் கிட்டத்தட்ட 4,292 கால்நடை அலகுகள் உள்ளன. கால்நடை இனங்களுக்கு ஏதாவது ஒரு பிரச்சினை என்றால் இந்தக் கிராமத்திலிருந்து சிகிச்சைக்குக் கொண்டு செல்ல 10 கி.மீ. சுற்றளவில் கால்நடை மருந்தகம் இல்லை என்ற நிலை இருக்கின்றது. ஆகவே, மக்களின் சிரமம் கருதி கால்நடை கிளை நிலையம் ஒன்றை இந்த ஆண்டே அமைக்க அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

2022 மார்ச் 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம் – மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பகுதியில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்து கால்நடை கிளை நிலையம், கால்நடை மருந்தகம் மற்றும் கால்நடை மருத்துவமனை போன்றவற்றை அரசு அமைத்துத் தருகிறது. அதன்படி கால்நடைகளினுடைய எண்ணிக்கை 3,000–க்கு அதிகமாகவும், ஒரு கால்நடை கிளை நிலையத்திற்கும் மற்றொரு கால்நடை கிளை நிலையத்திற்கும் இடைப்பட்ட தொலைவு மூன்று கிலோ மீட்டருக்கு அதிகமாகவும் இருக்குமானால் அந்தப் பகுதியில் கால்நடை கிளை நிலையம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பின்னர் அங்குள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 5,000–க்கும் மேல் அதிகரிக்கும்பட்சத்தில், அந்தப் பகுதியைச் சுற்றி செயல்பட்டுவரும் கால்நடை கிளை நிலையத்திற்கு இடைப்பட்ட தூரம் 5 கி.மீ.–க்கு மேல் இருந்தால் அந்தக் கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். அந்த கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட வேண்டுமானால் அங்கு தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 40–க்கு மேலாக இருக்க வேண்டும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. பிரபாகரன் அவர்கள்.*

திரு. ம. பிரபாகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுவட்டாரப் பகுதியில் கால்நடை கிளை நிலையம் இல்லாத சூழ்நிலையில் நடமாடும் கால்நடை மருந்தகம் இல்லாத மாவட்டமாகவும், கால்நடை மருத்துவமனை இல்லாத மாவட்டமாகவும் பெரம்பலூர் உள்ளதால், கால்நடை மருந்தகத்தினை பன்முக கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், மாண்புமிகு மீன்வளம் – மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளம் – மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் தொகுதி, ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியம், தேனூர் கிராமத்தைச் சுற்றியுள்ள தொட்டியாப்பட்டி, டி.களத்தூர், நத்தக்காடு, கண்ணப்பாடி போன்ற கிராமங்களில் சுமார் 3,167 கால்நடைகள் உள்ளன. அந்தக் கால்நடைகள் தேனூர் கிராமத்திலிருந்து 10 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள நக்கசேலம் கால்நடை மருந்தகத்திலும், 9 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள செட்டிகுளம் கால்நடை மருந்தகத்திலும் மருத்துவச் சேவை பெறுகின்றன.

பெரம்பலூர் தொகுதி, ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியம், தேனூர் கிராமத்தில் 3,167 கால்நடை அலகுகள் உள்ளதால், மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, முதற்கட்டமாக கால்நடை கிளை நிலையம் ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்பதை நான் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல் அவர்கள்.

திருமதி கு. மரகதம் குமரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவர், புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். மதுராந்தகம் தொகுதியில் பிலாப்பூர் கிராமத்தில் சுமார் 600 வீடுகள் உள்ளன. அப்பகுதியில் 2,000 கால்நடைகள்மூலம் 3,000 லிட்டர் பால் கொள்முதல் செய்கிறார்கள். கால்நடைகளுக்கு ஏதேனும் பிரச்சினைகள் என்றால், சுமார் 13 கிலோ மீட்டர் தூரம் NH road தாண்டிச் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது. அதுவும், தனியார் கால்நடை மருத்துவமனைகளில் பணம் செலவழிக்க நேரிடுகின்றது. எனவே, அந்தப் பகுதியில் அரசு கால்நடை மருத்துவமனை அல்லது கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

2022 மார்ச் 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம் – மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை நியாயமான கோரிக்கை. எங்களுடைய துறை அலுவலர்களை அனுப்பி, அந்த இடத்தில் கிளை நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கும் என்றால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, நிதிநிலைமைக்கேற்ப அதனை அமைப்பதற்கு நாங்கள் நடவடிக்கை எடுப்போம் என்ற உறுதியைச் சொல்லிக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ் அவர்கள்.*

திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்ப்புக்கு நன்றி. தூத்துக்குடி மாவட்டம்,* **ஸ்ரீ***வைகுண்டம் தொகுதியில், கருங்குளம் பகுதியில் சேரக்குளம் என்ற ஊர் இருக்கிறது. அங்கே கால்நடைகளை நம்பி, அநேக மக்கள் வசித்து வருகின்றார்கள். அதையே வாழ்வாதாரமாகவும் கொண்டிருக்கின்றார்கள். அங்கே ஒரு கால்நடை மருத்துவமனை அவசியம் தேவைப்படுகிறது; அமைத்துத் தரப்படுமா என்று தாழ்மையுடன் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம் – மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன சேரக்குளம் ஊரில் கால்நடை கிளை நிலையம் அமைப்பதற்காக சென்ற வருடமே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைகளைப் பெற்றுத் தந்திருக்கின்றோம். வெகு சீக்கிரத்தில் அதற்கான அறிவிப்புகள் உங்களுக்கு வந்துசேரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் சட்டமன்றத் தொகுதி, திருநாகேஸ்வரம் பேரூராட்சியில் புதிதாக கால்நடை மருத்துவமனை ஒன்று அமைத்திட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

கால்நடை மருத்துவமனை அமைப்பதற்காக, சுமார் ஒரு கோடி ரூபாய் மதிப்பிலான 10,000 சதுர அடி இடத்தை சன்னபுரம் மிராசுதாரர்கள் வழங்கியிருக்கிறார்கள். தற்போது சிகிச்சைக்காக கால்நடை மருத்துவமனைக்கு சுமார் 10 கிலோ மீட்டர் தொலைவிற்குச் செல்ல வேண்டியிருக்கிறது. திருநாகேஸ்வரம் பேரூராட்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள சன்னபுரம், ஆண்டலாம்பேட்டை, மாங்குடி, நடுவக்கரை, தேப்பெருமாநல்லூர், அய்யாவாடி, சீனிவாசநல்லூர் மற்றும் பிளாஞ்சேரி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த கால்நடை வளர்ப்பவர்கள் பயன்பெறும் வகையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருநாகேஸ்வரம் பேரூராட்சியில் ஒரு கால்நடை மருத்துவமனையை அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளம் – மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–35

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர் திரு. அன்பழகன் அவர்களின் கோரிக்கை நியாயமான கோரிக்கையாக இருக்கின்றது. அந்தக் கோரிக்கையின் அடிப்படையில், இந்தத் துறையின்மூலம் ஆய்வு செய்து, இந்த வருடமே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, நிதிநிலைமைக்கேற்ப, அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற உறுதியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 36, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கணபதி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.